வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

ஈழநாடு
Eelanadu

26.09.2020 சனிக்கிழமை

விலை ரூ. 20/=

## ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை வழக்கு முடிவுக்கு

### முதன்மை சந்தேக நபர் உயிரிழந்ததால்

கொழும்பு, செப் 26
ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜு தீன் கொலை வழக்கின் முதன்மைச் சந் தேக நபர் உயிரிழந்த நிலையில் அந்த வழக்கை மேலும் தொடர முடியாது எனக் கட்டளை வழங்கிய கொழும்பு மேல் நீதிமன்றம், வழக்கை முடி வுக்குக் கொண்டு வந்துள்ளது. 02

# இலங்கையின் பொறுப்புக்கூறல்; சர்வதேச பொறிமுறை அவசியம்

## 5 மனித உரிமைகள் அமைப்புகள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, செப்ரெம்பர் 26
"நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் விவகாரங்களில் மீண்டும் பின்னடைவை ஏற்படுத்தக்கூடிய விதமாக இலங்கை அரசாங்கம் செயல்படுகின்றது. இந்த நிலையில், இலங்கை தொடர்பில் சர்வதேச பொறுப் புக்கூறல் பொறிமுறையை ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச கவுன்ஸில் உருவாக்க வேண்டும்."
-இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஆசிய அமையம் உள்ளிட்ட ஐந்து சர்வதேச மனித உரிமைகள் அமைப் புக்களின் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 02



## மாணவர்கள் – பொலிஸார் முறுகல் யாழ். பல்கலைக்கழகத்தில் பதற்றம்

யாழ்ப்பாணம், செப். 26
யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பொலிஸா ருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு முறுகல் நிலையை அடைந்தது. இதையடுத்து அப்பகுதியில் மேலதிகமாக பொலிஸாரும் இராணுவத்தின ரும் குவிக்கப்பட்டமையால் பல்கலைக்கழகச் சூழ லில் நேற்றுப் பிற்பகல் முழுவதும் பதற்றம் 02

## வீடு வீடாக சென்று குறைகள் விசாரித்த கோட்டாபய

கொழும்பு, செப் 26
வீடு வீடாகச் சென்று மக்களின் குறை நிறைகளை விசாரிக்கும் நடவடிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பித்துள்ளார்.
அதற்கமைய நேற்று பதுளை, ஹல்துமுல்ல, வெலங்விட கிராமத்திற்கு ஜனாதிபதி சென்றிருந்தார்.
மிக எளிமையாகச் சென்ற ஜனாதிபதி அங்கு வாழும் மக்களின் 02

## பாடகர் எஸ்.பி.பி. மறைந்தார்



சென்னை, செப் 25
உலகின் முன்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் நேற்றுக் காலமானார். இறக்கும் போது அவருக்கு 74 வயதாகும்.
நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.04 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது என்று சென்னை தனியார் மருத்துவமனையால் அறிவிக்கப்பட்டது.
16 மொழிகளில் 40 ஆயிரம் பாடல்களுக்கு மேல் பாடியுள்ள அவர், உலகின் முன்னணி பாடகராக வலம் வந்தார். அவரது இழப்பு உலக 02

## தேங்காய்க்கு விலை நிர்ணயம் நேற்று முதல் நடைமுறைக்கு

கொழும்பு, செப் 26
தேங்காய் ஒன்றின் அதி கூடிய விலையாக 60 ரூபா தொடக்கம் 70 ரூபா வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள் ளது.
இந்த விலை நிர்ணயம் நேற்று (செப். 25) தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று அதிகார சபை குறிப்பிட்டுள் ளது.
அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு ஊடாக இந்த விலை நிர்ணயம் நேற்றி ரவு வெளியிடப்பட்டுள் ளது. 02

### தமிழ்க் கட்சிகள் இன்று நடத்தவிருந்த

## உணவு ஒறுப்பு போராட்டத்துக்கு பருத்தித்துறை நீதிமன்றம் தடை!

யாழ்ப்பாணம், செப். 26
தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக இன்று முன்னெடுக்க விருந்த உணவு ஒறுப்பு போராட்டத்துக்கு பருத்தித் துறை நீதிவான் நீதிமன்று நேற்றுத் தடை உத்தரவு பிறப்பித்தது.
திலீபன் நினைவேந்தல் தடைக்கு எதிர்ப்புத் தெரி வித்து தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய முன்ற லில் உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஒன்றி ணைந்த தமிழ்த் தேசியக் கட்சி கள் அழைப்பு விடுத்தன.
இந்தப் போராட் டம் இன்று தொண்டை 02



## இந்திய மீனவர் அத்துமீறல் குறித்து மோடியுடன் இன்று மஹிந்த பேச்சு

### வடக்கு மீனவர்களிடம் அவரே கூறினார்

கொழும்பு, செப் 26
இந்திய மீனவர்கள் அத்து மீறி இலங்கை கடற்பரப்புக் குள் தொழிலில் ஈடுபடுவதால் வடக்கு மாகாண மீனவர்கள் பாதிக்கப்படுகின்றமையை சுட்டிக் காட்டி அந்த நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இன்று நடைபெறும் பேச்சில் எடுத்துக் கூறுவேன் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.
வடக்கு மாகாண மீனவர்களுடன் இன்று 02

## மல்லாகம் நீதிமன்ற வலயத்திலும் தடை

யாழ்ப்பாணம், செப் 26
மல்லாகம் நீதிவான் நீதி மன்ற நியாயாதிக்க எல்லைக் குள் இன்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட் டத்தை நடத்துவதற்குத் தடை உத்தரவு பொலிஸாரால் நேற்றிரவு பெறப்பட் டுள்ளது. 02

### உண்ணாவிரதப் போராட்டத் தடை

## பொலிஸாரின் விண்ணப்பத்தை தமிழ் கட்சிகள் எதிர்க்கவில்லை

யாழ்ப்பாணம், செப். 26
தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்று முன்னெடுக்கவிருந்த போராட்டத்திற்கு நீதிமன்றம் நேற்று தடை விதித்தது. இந்தத் தடை விதிப்புக்கு எதிராக ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் வாதிட எந்தச் சட்டத்தரணி யும் பருத்தித்துறை நீதிமன்றில் தோன்றியிருக்கவில்லை என்று தெரிய வருகின் 02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இந்திய மீனவர்...

(நேற்று) அலரிமாளிகையில் நடத்திய கலந்துரையாடலின்போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நேற்றைய கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய கடற்தொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். அவர்கள் தமது பிரச்னைகளை விரிவாக எடுத்துக் கூறினர்.

அதன்போது, இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபடுவதால் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்படுவது தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டது.

அது தொடர்பில் விரிவாகக் கேட்டறிந்த பிரதமர், இந்தியப் பிரதமருடன் இன்று இடம்பெறும் கலந்துரையாடலின்போது இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டி இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் வடக்கு மாகாண மீனவர்களின் பிரச்னைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படுவதற்கான முக்கிய முடிவுகள் பிரதமரால் எடுக்கப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இதேவேளை, "கொவிட் - 19 நோய் பரவலுக்குப் பிந்தைய காலத்தில் நமது கூட்டுறவை மேலும் மேம்படுத்துவதற்கான வழிகளை நாம் ஆராயவேண்டும்," என்ற தலைப்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இன்று சனிக்கிழமை மெய்நிகர் முறையில் சந்தித்து பேசுகின்றனர். (அ)

## வீடு வீடாக...

தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்துள்ளார்.

அத்துடன் அந்த மக்களின் வீடுகள் மற்றும் விவசாயத்தையும் ஜனாதிபதி கண்காணிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையின்...

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 45 ஆவது கூட்டத் தொடரில் உண்மை, நீதி ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பாக ஐ.நாவின் முன்னாள் விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிறீப் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார். இது குறித்து ஐந்து மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டன.

அந்த அறிக்கையில்: -

"மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்தமைக்காக ஐ.நா. விசேட அறிக்கையாளருக்கு நன்றி கூறுகின்றோம். அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புபட்ட வகையில், அண்மைக்காலமாக இலங்கையின் நிலைமாறுகால நீதி பொறிமுறையின் நிலவரம் தொடர்பில் சில முக்கிய விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்

"அரசாங்கம் முன்மொழிந்துள்ள இருபதாவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், அது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்தும். அத்துடன் நீதித்துறை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் சுதந்திரத்தைப் பெரிதும் வலுவிழக்கச் செய்யும்.

"நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் விவகாரங்களில் மீண்டும் பின்னடைவை ஏற்படுத்தக்கூடிய விதமாக இலங்கை அரசாங்கம் செயல்படுகின்றது. இந்த நிலையில், இலங்கை தொடர்பில் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச கவுன்ஸில் உருவாக்க வேண்டும்", என்றுள்ளது. (ஐ)

## மாணவர்கள்...

நீடித்தது.

அரசாங்கத்தின் அடக்குமுறைகளை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று கறுப்பு உடை அணியும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனை அறிந்து அங்கு சென்ற பொலிஸாரும் படையினரும் பல்கலைக்கழக சூழலில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், கறுப்பு உடை அணிந்த மாணவர்கள் சிலர், பல்கலைக்கழகத்தின் புதிய (பாரம்பரிய) நுழைவாயிலில் நின்றிருந்தனர். அவர்களை பல்கலைக்கழகத்தின் உள்ளே செல்லுமாறு கூறினர். ஆனால், மாணவர்கள் வீதியில் நிற்பது தமது உரிமை என்று வலியுறுத்தினர்.

இதையடுத்து இரு தரப்பினரிடையேயும் முரண்பாடு ஏற்பட்டது. இதையடுத்து மாணவர்களை அங்கிருந்து செல்லுமாறு பொலிஸாரும், பொலிஸாரை அங்கிருந்து செல்லுமாறும் மாணவர்களும் கூறினர். இது முறுகல் நிலைவரை சென்றதுடன், அப்பகுதிக்கு மேலதிக பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டனர். அத்துடன் மாணவர்களை அங்கிருந்து வலிந்து அகற்றவும் பொலிஸார் முனைந்தனர்.

எனினும் பல்கலைக்கழக நிர்வாகத்தின் தலையீட்டை அடுத்து சில மணிநேரங்களின் பின்னர் சுமூக நிலை ஏற்படுத்தப்பட்டது. (ஐ)

## பாடகர் எஸ்.பி.பி...

இசை அரங்குக்கு பேரிழப்பாகும்.

ஆந்திராவின் நெல்லூரில் 1946ஆம் ஆண்டு ஜூன் 4ஆம் திகதியன்று பிறந்த எஸ்.பி. பாலசுப்ரமணியம் 1966 இல் தெலுங்குப் படத்தில் பாடியதன் மூலம் பின்னணிப் பாடகராகத் திரையுலகில் அறிமுகமானார். பிறகு கன்னடம், தமிழ், மலையாளம் என தென்னிந்திய மொழிப் படங்களில் பாடிய எஸ்.பி.பி., ஹிந்திப் படங்களிலும் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார்.

1969 இல் எம்.ஜி.ஆருக்காக அடிமைப்பெண் படத்தில் ஆயிரம் நிலவே வா என்கிற பாடலைப் பாடி மிகப் பெரிய திருப்புமுனையைப் பெற்றார். 16 மொழிகளில் 40,000க்கும் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார். கன்னட இசையமைப்பாளர் உபேந்திர குமாருக்காக 1981 பிப்ரவரி 8 அன்று ஒலிப்பதிவுக்கூடத்தில் ஒரே நாளில் 21 பாடல்களைப் பாடிச் சாதனை நிகழ்த்தினார்.

ஆறு தேசிய விருதுகள் பெற்றுள்ள எஸ்.பி.பி., சங்கராபரணம் என்ற தெலுங்குப் படத்துக்காக முதன்முறையாகத் தேசிய விருதைப் பெற்றார்.

1981இல் ஏக் துஜே கே லியே படத்தின் மூலம் ஹிந்தித் திரையுலகில் நுழைந்த எஸ்.பி.பி., இதற்காக தனது 2-வது தேசிய விருதைப் பெற்றார். பிறகு இரு தேசிய விருதுகளைத் தெலுங்குப் படப் பாடல்களுக்காகவும் தலா ஒரு தேசிய விருதை தமிழ், கன்னடப் படப் பாடல்களுக்காகவும் பெற்றார். 2001இல் பத்மஸ்ரீ, 2011இல் பத்மபூஷன் விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டன.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் சென்னையில் உள்ள எம்.ஜி.எம். ஹெல்த்கேர் மருத்துவமனையில் ஓகஸ்ட் 5 ஆம் திகதி முதல் தீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார்.

கொரோனா பாதிப்பிலிருந்து குணமடைந்த நிலையில் எஸ்.பி.பிக்கு வெண்டிலேட்டர், எக்மோ கருவிகளுடன் தொடர்ந்து தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் மருத்துவமனையில் 51 நாள்களாகச் சிகிச்சை பெற்று வந்த பாடகர் எஸ்.பி.பி நேற்று காலமானார். இத்தகவலை அவருடைய மகன் எஸ்.பி. சரண் அறிவித்தார். அவரது இறுதிச் சடங்குகள் இன்றைய தினம் இடம்பெறவுள்ளன. (அ)

# மக்கள் முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரானார் அமைச்சர் காமினி



கொழும்பு, செப். 26

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பொது மக்கள் முறைப்பாட்டு தெரிவுக் குழுவின் தலைவராக அமைச்சர் காமினி லொக்குகே நியமிக்கப்பட்டுள்ளார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் அறிவித்தார்.

அமைச்சர் காமினி லொக்குகேயின் பெயரை அந்த பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட முன்மொழிந்ததுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் புஷ்பகுமார அதனை வழிமொழிந்தார் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

மேற்படி நியமனம் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற பொது மக்கள் முறைப்பாட்டுதெரிவுக் குழுவின் முதலாவது அமர்வின் போதே இடம்பெற்றது.

பொதுமக்கள் முறைப்பாட்டு ஆணைக்குழுவில் இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, சதாசிவம் வியாழேந்திரன், தேனுக விதானகமகே, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், திலிப் வெதஆராச்சி, காதர் மஸ்தான், அசோக பிரியந்த, முஜிபுர் ரஹ்மான், குலசிங்கம் திலீபன், நிபுண ரணவக்க, கீதா குமாரசிங்க, ராஜிகா விக்கிரமசிங்க ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள் ஆவார். (ஐ)

## மல்லாகம்...

ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் சந்திப்பையடுத்து நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நீதிமன்றத் தடை உத்தரவை மீறாமல் இன்று திட்டமிட்டபடி உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறிகாந்தா அறிவித்திருந்தார்.

இதனையடுத்தே தெல்லிப்பழைப் பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு மன்று தடை உத்தரவு வழங்கியுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்ற எல்லையில் போராட்டங்கள் நடத்துவதற்கு பொலிஸாரால் தடை உத்தரவு பெறப்படாத நிலையில் அந்தப் பகுதியில் போராட்டங்களை நடத்தக்கூடும் என்ற அடிப்படையில் பொலிஸாரால் இந்தத் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது. (ஐ)

## உணவு ஒறுப்பு...

மானாறு செல்வச் சந்நிதியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தப் போராட்டத்துக்குத் தடை விதிக்கக்கோரி பொலிஸார் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தனர்.

இந்த விண்ணப்பத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து எந்த சட்டத்தரணியும் முன்னிலையாகவில்லை. இதனால், பொலிஸாரின் கோரிக்கையை ஏற்று நீதிமன்றம் போராட்டத்திற்குத் தடை உத்தரவு பிறப்பித்தது.

உத்தரவின்படி: - "1987.09. 15 ஆம் திகதி அன்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து உயிர்நீத்த இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவரை நினைவுகூரும் விதமாக 2020 .09. 26ஆம் திகதி வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வச் சந்நிதி கோயிலுக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவிருப்பது தொடர்பாக நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் ஹேரத் என்பவருக்கு தகவல் கிடைத்ததன் அடிப்படையில் இந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

"மேற்படி வழக்கில் இன்றைய நீதிமன்றின் கட்டளையின் பிரகாரம் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 106ஆம் பிரிவின் பிரகாரம் இந் நீதிமன்ற நியாயாதிக்கத்தின் எல்லைக்கு உட்பட்ட இடங்களில் மேற்குறிப்பிட்ட உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவோ, பொதுமக்கள் ஒன்று கூடுவதோ கலந்துகொள்வதோ இன்றிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## தேங்காய்க்கு...

நாட்டில் தற்போது தேங்காய் ஒன்றின் விலை 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் நிலையில் பெருந்தோட்டத்துறை அமைச்சுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் பின் தேங்காய்க்கு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

## ரக்பி வீரர் வசீம்...

இந்த வழக்கின் முக்கிய சாட்சியங்களை மறைத்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட முதன்மைச் சந்தேக நபரான சட்ட மருத்துவ வல்லுநர், பேராசிரியர் ஆனந்த சமரசேகர உயிரிழந்த காரணத்தைக் காட்டியே இந்த வழக்கு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தக் கட்டளையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுளா திலகரத்ன நேற்று வெள்ளிக்கிழமை வழங்கினார்.

மைத்திரி - ரணில் கூட்டு ஆட்சியில் வசீம் தாஜுதீனின் சடலம் பரபரப்பாக மீளத் தோண்டியெடுக்கப்பட்டு உயிரிழப்புக்கான காரணம் விபத்தில்லை, கொலையென அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில், 1,200 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. 22 இலட்சம் தொலைபேசி அழைப்புகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டது. (அ)

## பொலிஸாரின்...

றது.

திலீபன் நினைவேந்தலுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தடை விதித்தது. இதையடுத்து வடமராட்சி - தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய முன்றலில் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாகத் தெரிவித்தன.

இதையடுத்து, இந்தப் போராட்டத்தை தடை செய்யக்கோரி பருத்தித்துறை நீதிமன்றில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விண்ணப்பம் செய்தன.

இந்த விண்ணப்பத்தை எதிர்த்து வாதிடுவதற்காக ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் எந்த ஒரு சட்டத்தரணியும் மன்றில் தோன்றவில்லை. இதனால், பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று பருத்தித்துறை நீதிமன்று அதன் நியாயாதிக்க எல்லைக்குள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தத் தடை உத்தரவு பிறப்பித்தது.

இதேவேளை, பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆட்சேபித்து வாதத்தை முன்வைக்க சட்டத்தரணியை ஏற்பாடு செய்துள்ளதாக தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா நேற்று தெரிவித்திருந்தார். எனினும், எந்தச் சட்டத்தரணியும் பொலிஸாரின் விண்ணப்பத்தை எதிர்த்து மன்றில் முன்னிலையாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Eelanadu ஈழநாடு
26.09.2020 சனிக்கிழமை
சார்வரி, புரட்டாதி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# மோடி - மஹிந்த ‘சந்திப்பு’

இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் காணொலி வழியாக உத்தியோகபூர்வ சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது. இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு சென்று, பிரமதர் மோடியை சந்தித்திருந்தார். பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்ததன் பின்னர், இரு நாட்டு பிரதமர்களும் உத்தியோகபூர்வ சந்திப்பு ஒன்றில் ஈடுபடவுள்ளனர். 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான சர்சைகள் ஒருபுறமும், 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்க வேண்டுமென்னும் கோஷங்கள் ஒருபுறமாகவும், தென்னிலங்கை அரசியலை ஆக்கிரமித்திருக்கின்ற சூழலில்தான், இவ்வாறானதொரு சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இம்மாதம் 17 ஆம் திகதி, நரேந்திர மோடியின் 70ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது ருவிட்டர் பக்கத்தில் வாழ்த்துக்களை பகிர்ந்திருந்தார். மஹிந்த ராஜபக்ஷ அவ்வப்போது ருவிட்டர் பக்கத்தை நாடுபவர். மோடி போன்று, தொடர்ச்சியாகப் பயன்படுத்துபவர் அல்ல. மோடிக்கு வாழ்த்துக் கூறிவிட்டு பிறிதொரு பதிவையும் மஹிந்த இட்டிருந்தார். அந்தப் பதிவு இந்திய அரசியல் அவதானிகளின் கண்களை உறுத்துவதாக இருந்தது. ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் அடித்தளமிடப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டம் பற்றியே மஹிந்த பதிவிட்டிருந்தார் – நானும் சீனப் பிரதமர் ஜிங்பிங்கும் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்திற்கான எண்ணக்கருவை உருவாக்கி, ஆறு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் நிலைமைகளை ஆராய்வதற்கென, நானும் இலங்கைக்கான சீனத் தூதுவர் உள்ளிட்ட சீனப் பிரமுகர்களும் திட்டத்தை பார்வையிட சென்றிருந்தோம். நாங்கள் அங்கு இருந்தபோது, கோல்ப் பந்தை அடிப்பதற்கு முயன்று பார்த்தேன். இவ்வாறு மஹிந்த பவிட்டிருப்பதை மேற்கோள் காட்டி, இந்திய ஊடகமொன்றில் எழுதியிருக்கும் ஓர் ஆய்வாளர் இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார். மோடியின் 70ஆவது பிறந்த தினத்தில் மஹிந்த சீனாவின் புற்றரையில் கோல்ப் விளையாடுகின்றாரா?

சீனாவை நோக்கி இலங்கை அதிகம் சாய்ந்து கொண்டு செல்கின்றது என்னும் பார்வை மேலோங்கியிருந்த ஒரு சூழலில்தான், 2015இல் மஹிந்த ஆட்சியை இழந்து போனார். ஆனாலும், அதன் பின்னரும் சீனாவின் செல்வாக்கு இலங்கைக்குள் அதிகரிப்பதை தடுத்து நிறுத்த முடியவில்லை. அதிர்ச்சியளிக்கத்தக்க வகையில் மேற்குலகின் நண்பராகக் கருதப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கியதுடன், மேலதிகமாக 15,000 ஏக்கர் நிலத்தையும் வழங்கினார். ஆட்சி மாற்றங்களால் சீனாவைத் தடுத்து நிறுத்தலாம் என்னும் அணுகுமுறையும் தோல்வியுற்றது.

சீனா அதிகம் உள்ளுக்குள் வந்துவிட்டது. அது தடுத்து நிறுத்தும் எல்லைகளை கடந்துவிட்டதா? இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கின்றனர். இலங்கைத் தீவு எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்தியா, சீனா, அமெரிக்கா என்னும் மூன்று அதிகாரங்களின் தலையீடுகளுக்குரிய ஒரு நாடாகவே இருக்கப் போகின்றது. இதில் இந்தியாவும் அமெரிக்காவும் ஒரு புள்ளியில் சந்திக்கின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மஹிந்த – மோடி சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கொழும்புக்கும் – பீஜிங்கிற்கும் இடையிலான உறவின் சூத்திரதாரி மஹிந்த என்பதை இந்திய தரப்பு நன்கறியும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது காங்கிரஸ் இந்தியா, புலிகளின் வீழ்ச்சி தொடர்பில் மட்டுமே சிந்தித்ததா; கொழும்பு – பீஜிங் நெருக்கத்தை காங்கிரஸ் கொள்கை வகுப்பாளர்கள் துல்லியமாக கணிக்கத் தவறிவிட்டனரா? அதனால்தான் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டதா? இப்படிப் பல கேள்விகளைக் கேட்க முடிந்தாலும் சீனா அதன் கால்களை மிகவும் வலுவாக ஊன்றிவிட்டது. இலங்கை எதிர்காலத்தில், சீனாவின் ஒரு கொலனியாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை எனறே பல சர்வதேச அரசியல் நோக்கர்களும் கணிக்கின்றனர்.

# பாராளுமன்ற சிறப்புரிமை

- மாலி



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சில சிறப்புரிமைகள் உள்ளன; சலுகைகளும் உள்ளன. அவர்களுடைய சிறப்புரிமைகள், பாராளுமன்ற நிலையியற் கட்டளையால் உத்தரவாதம் பெற்றவை.

பாராளுமன்றத்தில் அவர்களுடைய பேச்சுரிமை இவற்றுள் பிரதானமானது. பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் ஆற்றிய உரை தொடர்பில் பாராளுமன்றத்துக்கு வெளியே, நீதிமன்றம் உட்பட, எங்குமே அவரை விசாரணைக்குட்படுத்த முடியாது. அவர் அங்கு ஆற்றிய உரை தொடர்பில் அவரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறித்துவிடவும் முடியாது.

நிலையியற் கட்டளையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய, ‘கௌரவ சபை’ என்று அழைக்கப்படுகின்ற பாராளுமன்ற சபையின் கௌரவத்தைப் பேணி, உறுப்பினர் ஒருவர் தன் எண்ணத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் அவருடைய சிறப்புரிமை. சபாநாயகரின் அநுமதியுடன் உறுப்பினர் ஒருவர் பேசிக்கொண்டிருக்கையில், நிலையியற் கட்டளையின் ஒழுங்குகளை அவர் மீறுவதாக கருதினால், உறுப்பினர் ஒருவர் குறுக்கிட்டு, அவர்மீது ஒழுங்கு பிரச்னை ஒன்றை எழுப்ப முடியும். அப்போது, சபாநாயகரின் தீர்ப்புக்கு அமைய உறுப்பினர் தனது பேச்சைத் தொடர்வார் அல்லது அந்த விடயத்தைத் தவிர்ப்பார் அல்லது கூறியதை வாபஸ்பெறுவார்.

இதுதவிர, உறுப்பினர் ஒருவரின் உரையை அல்லது உரையின் ஒரு பகுதியை அல்லது பகுதிகளை பாராளுமன்ற விவாதங்கள் (ஹன்சாட்) அதிகார அறிக்கையிலிருந்து நீக்கக் கோருவதும் நீக்குவதும், ‘அன்னை பாராளுமன்றம்’ என்று இலங்கை கொண்டாடும் பிரித்தானிய பாராளுமன்ற சம்பிரதாயத்தில் இல்லாததாகும்.

ஜே. ஆர். ஜயவர்த்தன அரசாங்க காலத்தில், முதலாம் எதிரியாக குற்றஞ்சாட்டப்பட்டு ம்ரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு மன்னிப்பு வழங்கி, விடுதலை அளித்தார் ஜனாதிபதி ஜயவர்த்தன.

அப்போது, பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினராகவிருந்த அநுர பண்டாரநாயக்க, சபை ஒத்திவைப்பு பிரேரணையின்போது வினா ஒன்றை எழுப்பினார். முதலாம் எதிரிக்கு ஜனாதிபதி மன்னிப்பு கிட்டுமாயின், இரண்டாம் எதிரியும் விடுவிக்கப்படலாம்தானே என்பது அவருடைய கேள்வி.

அமைச்சர் ஒருவர் பதிலளித்தார். அமைச்சரின் பதிலைத் தொடர்ந்து அநுர மீண்டும் எழுந்தார்.

‘அமைச்சர் பதிலளித்த பின்னர், உறுப்பினர் மீண்டும் அது தொடர்பில் வினா எழுப்ப இயலாது’ என்றார் பிரதமரும் சபை முதல்வருமான ஆர். பிரேமதாஸ.

இவர்கள் இருவரும் அரசியலில் பரம வைரிகள்.

‘அமைச்சரின் பதிலில் எனக்கு திருப்தியில்லை’ என்றார், அநுர.

அமர்ந்தபடி எதையோ வாசித்துக்கொண்டு, ‘உம்மை எவருமே திருப்திப்படுத்த இயலாது’ என்றார் பிரேமதாஸ.

‘ஒருவர் தவிர’ என்றார் அநுர.

‘யார்?’ என்று அநாயசமாகவே கேட்டார் பிரதமர்.

‘உமது மனைவி’ என்று திடீரென்றே சொன்னார் அநுர.


பிரதமர் பிரேமதாஸ மாத்திரமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் உள்பட, சபை முழுவதுமே ஒரு கணம் நிசப்தத்தில் திகைத்தது. சில விநாடிகளில், மிகக் கீழான வார்த்தைகளில் அநுரவை வைதார் பிரேமதாஸ. அப்போதும் சபையில் நிசப்தம்தான் நிலவியது. அது, சபையின் கௌரவத்தைக் காக்கவேண்டிய சபை முதல்வரின் நடத்தை குறித்ததேதான்.

மறுநாள், பிரதமர் பிரேமதாஸ கூறிய வார்த்தைகளை ஹன்ஸாட்டிலிருந்து நீக்க சபையில் பிரேரிக்கப்பட்டு, அவை நீக்கப்பட்டன.

அந்த ‘கௌரவ சபை’யின் கௌரவத்துக்கு இழுக்கானதில், பிரதமரின் அப் பேச்சு ஹன்சாட்டிலிருந்து நீக்கப்பட்டது.

ஆனால், ‘இந் நாட்டின் ஆதிக் குடிகள் தமிழர்கள்’ என்ற விக்னேஸ்வரனின் கன்னிப் பேச்சிலிருந்து, பௌத்த சிங்கள வாதத்துக்கு மாற்றான கருத்துக்களை ஹன்சாட்டிலிருந்து நீக்கவேண்டும் என்று எழ ஆரம்பித்திருக்கும் கோரிக்கைகள், உண்மையில் அக் கௌரவ சபையின் கௌரவத்தைப் புரிந்துகொள்ளாமையே. ∎

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய கடை ‘சீல்’

யாழ்ப்பாணம், செப்.26

காரைநகரில் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்பட்ட பலசரக்கு கடை ஒன்று நீதிமன்ற உத்தரவுக்கு அமைய காலவரையின்றி “சீல்” வைத்து மூடப்பட்டுள்ளது.

காரைநகர் பகுதியில் உள்ள பலசரக்கு கடையொன்றை காரைநகர் பொது சுகாதாரப் பரிசோதகர் திடீர் சோதனைக்கு உட்படுத்தியபோது, பழுதடைந்த நெத்தலிக் கருவாடுகள் , மிளகு தூள் பொதிகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டன.

அத்துடன் கடை மிகுந்த சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்பட்டுள்ளது.

அதேவேளை 80 சதவீத எச்சரிக்கை ஒளிப்படம் இன்றி விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 08 சுருட்டுக் கட்டுக்களும் மீட்கப்பட்டன. அவை தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால், ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது.

எச்சரிக்கை ஒளிப்படம் இன்றி விற்பனைக்காக சுருட்டை வைத்திருந்த குற்றத்துக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து மன்று உத்தரவிட்டது.

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமையால் காலவரையின்றி கடையை மூடி சீல் வைக்க உத்தரவிட்ட நீதிவான், வழக்கை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.



# முல்லைத்தீவில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

முல்லைத்தீவு, செப்.26

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்விளான் கிராமத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்விளான் கிராமத்தைச் சூழவும் பாலியாறு செல்கிறது. பாலியாறு தமது கிராமத்தைச் சூழ ஓடுவதன் காரணமாக கிராமத்தில் உள்ள கிணறுகளில் போதியளவு நீர் இருந்தமையால் மக்கள் விவசாயத்தை மேற்கொண்டு வந்தனர். இதனால் தமது வாழ்வும் சீராக இருந்ததாகவும் கடந்த 6 வருடங்களாக அந்தச் சீரான வாழ்வு பாதிக்கப்பட்டு வருவதாகவும் மக்கள் கூறினர்.

பாலியாறுப் பகுதியில் கடந்த ஆறு வருடங்களாக இடம்பெற்று வரும் பாரிய மணல் கொள்ளையின் காரணமாக மரங்கள் முறிந்து விழுந்துள்ளதோடு அதன் ஆற்றுப்படுக்கைகளும் பாரியளவில் தோண்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

ஆற்றுப் பகுதி மணல் கொள்ளையர்களால் ஆழமாக்கப்படுவதால் கிராமத்தில் உள்ள கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து வருவதாகவும், இதனால் விவசாயத்துக்கு போதிய நீர் இல்லாமல் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டபோதும்துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

எனவே இந்தச் சட்டவிரோத செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மக்கள் சக்தி-ஐ.தே.க இடையே ஒற்றுமையை ஏற்படுத்துங்கள்!

## ரணிலிடம் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை

கொழும்பு, செப்.26

**ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான நெருக்கடிக்கான தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையில் ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**




அவர் மேலும் தெரிவிக்கையில்-

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக ஆக்குவதை நான் கடுமையாக எதிர்த்தேன். மேலும் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்பதே எனது கருத்து.

நான்சில வாரங்களுக்கு முன்பு ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்தேன். இது உத்தியோகபூர்வ சந்திப்பு அல்ல. எனது விருப்பப்படி நேரில் நடந்த ஒரு கூட்டம்.

கரு ஜயசூரியாவையும் சந்தித்தேன். இந்த நெருக்கடியைத் தீர்க்க நான் அவர்களிடம் பேசினேன். மீண்டும் யோசிக்க ரணில் விக்ரமசிங்கவுக்கு பரிந்துரைத்தேன்.

மக்கள் அளித்த தீர்ப்பை கருத்தில் கொண்டு இப்போது ஒரு முடிவுக்கு வருமாறு கோரிக்கை வைத்துள்ளேன். நான் ரணில் விக்ரமசிங்கவுடன் 35 ஆண்டுகள் பணியாற்றியுள்ளேன் ஆனால் அவர் எப்போதும் பிரச்னைகளிலிருந்து நழுவுகிறார்-என்றார்.

# கஜேந்திரகுமாருக்காக சபையில் சுமந்திரன்!

கொழும்பு, செப் 27

திலீபன் நினைவேந்தல் விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கொண்டு வந்த விசேட கூற்றுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அனுமதி வழங்க மறுத்ததையடுத்து அதைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் -

நான்இரண்டு காரணிகளை இந்தச் சபையில் கூற விரும்புகின்றேன். நானும் பொது அலுவல்கள் குழுவின் உறுப்பினராக உள்ளேன்.

கட்சித் தலைவர்கள் மக்கள் சார் விடயங்களை சபையில் கேட்பதில் எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

கடந்த பாராளுமன்ற அமர்வுகளில் ஒரு நபராகத் தனிக் கட்சியாக இருந்த டக்ளஸ் தேவானந்தா ஒவ்வொரு நாளும்



27/2 இன் கீழ் கேள்வி எழுப்பினார். அப்போது எவரும் தடை விதிக்கவில்லை. அது போல் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்த கூற்று எந்தவொரு நீதிமன்ற விசாரணையிலும் இருக்கும் விடயம் அல்ல. தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரு விடயம் தொடர்புடையது. எனவே சபாநாயகர் அவர்களே, தவறான முறையில் சபையை வழிநடத்தாது, சபையை உடனடியாக ஒத்திவைத்து இந்த விடயத்தைத் தீர்க்கக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

# திலீபனின் உலகளாவிய நினைவு அமெரிக்காவின் நியூயோர்க் நகரில்

நியூயோர்க், செப் 26

தமிழர் தேசத்தில் தமிழர்களின் நினைவேந்தும் உரிமைகளுக்குத் தடை போடும் இலங்கைக்கு எதிராக, உலகத்தமிழர்கள் இணையவழியே ஒன்றுகூடி தியாகி லெப். கேணல் திலீபனை நினைவேந்தும் நிகழ்வொன்றுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இன்று சனிக்கிழமை அமெரிக்காவில் (நியூயோர்க்) பிற்பகல் 1:30 மணிக்கு தொடங்கவிருக்கின்ற மைய நிகழ்வைத் தொடர்ந்து உலகப் பரங்பெங்கும் இருந்து வணக்க நிகழ்வுகள் இணையவிருக்கின்றன.

இந்த வணக்க நிகழ்வில் தியாகி திலீபனை நினைவேந்தும் கவிதைகள், பாடல்களை இணையவழி வழங்க விரும்பும் உலகத்தமிழ் உறவுகளை media@tgte.org என்ற மின்னஞ்சலுக்கு அறியத்தருமாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.

வணக்க நிகழ்வைத் தொடர்ந்து தியாகி திலீபன் முன்வைத்த அரசியலும், சமகால அரசியலும் என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கொன்று இடம்பெறவிருக்கின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

# கஜேந்திரகுமார், கஜேந்திரனுக்கு மன்றில் முன்னிலையாக உத்தரவு

வவுனியா, செப் 26

தியாக தீபம் திலீபனின் நினைவாக வவுனியாவிலிருந்து நல்லூர் வரை நடைபணயத்தை ஏற்பாடு செய்தமை தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரையும் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

நடைபயணத்தை ஏற்பாடு செய்தமைக்காகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வவுனியா நகரசபை உறுப்பினர் ஜானுஜன் ஆகியோரை எதிர்வரும் 28ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

# தேசியப் பட்டியலால் திணறுகின்றது ஐ.தே.க!

கொழும்பு, செப் 26

தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் கட்சி இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ஜோன்அமரதுங்கவை நியமிப்பதற்கு கட்சித் தலைவர் முடிவெடுத்துள்ளார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ள நிலையிலேயே அதனை ஐ.தே.க. மறுத்துள்ளது.

அதேவேளை, தேசியப்பட்டியல் விவகாரம் குறித்து இவ் வாரத்துக்குள் கட்சி இறுதி முடிவை எடுக்கும் எனவும், அடுத்த சபை அமர்வின்போது புதிய உறுப்பினர் சத்தியப் பிரமாணம் செய்வார் எனவும் ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

செய்திகள்

# தெற்கில் ஒரு பகுதி மீள 'லொக் டவுன்'?

## ரஷ்ய நாட்டவரால் வந்தது சிக்கல்

கொழும்பு,செப்.26

**தென்னிலங்கையின் சில பகுதிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட ரஷ்யப் பிரஜை சென்றுள்ளமையால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.**

**இந்த ரஷ்ய நாட்டவர் மாத்தறையிலுள்ள வர்த்தக நிலையங்களுக்குச் சென்றமை காரணமாக அந்த நகரத்தை தனிமைப்படுத்துவது தொடர்பில் சுகாதார பிரிவு ஆராய்ந்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.**

சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இந்த விடயத்தை கூறியுள்ளதாக ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த கொரோனா தொற்றாளர் மற்றும் அவரது நண்பர் மாத்தறை நகரத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு சைக்கிளில் சென்றுள்ளார் எனவும், அவருக்கு அருகில் பயணித்தவர்களைத் தற்போது வரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதேவேளை, இந்த ரஷ்ய நாட்டவர் தங்கியிருந்த ஹோட்டலில் பணியாற்றிய ஊழியர்கள் உட்பட 150 பேர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றுக்குள்ளான இந்த ரஷ்ய நாட்டவர், மாத்தறை நகரத்தின் பொல்ஹேன பிரதேசம் முழுவதும் சுதந்திரமாக சுற்றித் திரிந்துள்ளமை உறுதியாகியுள்ளது.

இதேவேளை, பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் மற்றும் சுகாதார அதிகாரிகளுக்கு இந்த ரஷ்ய நாட்டுக் குழுவினர் தனிமைப்படுத்தப்பட்ட விடயம் அறிவிக்கப் படவில்லை என சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இலங்கை யில் மீண்டும் சமூக மட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (அ)



# கட்டில்கள் போதாமையினால் நடைபாதையில் நோயாளிகள்!

## வவுனியா வைத்தியசாலையில் இந்த நிலை

வவுனியா, செப் 26

வவுனியா வைத்தியசாலையின் விடுதி இலக்கம் ஒன்றில் போதிய இடவசதிகள் இன்மையால் நோயாளர்கள் விடுதிக்கு வெளியே நடைபாதையில் படுத்துறங்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வவுனியா வைத்தியசாலையின் விடுதி ஒன்றானது காயங்கள் மற்றும் சிறுநீரகம் சார்ந்த சத்திர சிகிச்சைக்குள்ளாக்கப்படும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் பகுதியாகச் செயற்பட்டு வருகின்றது.

இந்த விடுதிக்குள் அண்ணளவாக 40 கட்டில்களே போடப்பட்டுள்ளன. அதனைவிட அதிகமான கட்டில்களைப் போடுவதற்கு அந்த விடுதியில் இடவசதி இல்லாதநிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் அதிகமான நோயாளர்கள் வருகை தரும் போது அவர்களுக்கு ஒதுக்குவதற்கு கட்டில்கள் இன்மையால், விடுதிக்கு வெளியே பிரதான கட்டடத்தின் வாயில் பகுதியில் நோயாளர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதி பொதுமக்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் நடந்து செல்லும் பகுதியாக காணப்படுகின்றது.

இந்த விடுதியில் கட்டில்கள் பற்றாக்குறையால் நோயாளர்களுக்குப் படுக்கைகளை ஒதுக்கிக் கொடுப்பதில் தாதிய உத்தியோகத்தர்களும் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் அதேவேளை, விடுதியில் பணிபுரியும் மருத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதால் அதிகமான நோயாளர்கள் அனுமதிக்கப் படும்போது கடமை புரியும் ஊழியர்களும் சிரமமான நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

வடக்கின் முக்கிய வைத்தியசாலையாக காணப்படும் வவுனியா மருத்துவனைக்கு முல்லைத்தீவு, மன்னார் உட்பட பல பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகை தருகின்றனர்.

இந்நிலையில் தீவிரமான நோயாளர்களை தங்கவைப்பதற்காக பயன்படும் இந்த விடுதியில் போதிய வசதிகளை ஏற்படுத்துகொடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# ரணில், சம்பந்தன், சுமந்திரன் ஆகியோருக்கு ஜனாதிபதி ஆணைக்குழு மீண்டும் அழைப்பு

கொழும்பு, செப் 26

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட ஊழல் ஒழிப்புக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரையும் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு மீண்டும் அறிவிக்கப்பட் டுள்ளது.

எதிர்வரும் 08 ஆம் திகதி இவர்கள் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகவேண்டும்.

இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் பியதாச குடாபாலகே ஆணைக்குழுவில் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஊழல் ஒழிப்புக் குழுவின் பரிந்துரைக்கு அமைய, பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, நிதி தூய்தாக்கல் குற்றச்சாட் டின் கீழ் விசேட மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை தொடர்பில் பியதாச குடாபாலகே ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை ஆராய்ந்ததை அடுத்தே, ஊழல் ஒழிப்புக் குழுவின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட ரணில் விக்ரமசிங்க, சரத் பொன்சேகா, பாட்டலி சம்பிக்க ரணவக்க, மங்கள சமரவீர, ரவூப் ஹக்கீம், அனுரகுமார திசாநாயக்க, எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரை எதிர்வரும் 08 ஆம் திகதி ஆஜராகுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் அரச சிரேஷ்ட சட்டத்தரணி துஷித் முதலிகே ஆகியோரையும் அன்றைய தினம் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு கோரப்பட் டுள்ளது. (அ)

# 'எங்கள் நாடு, எங்கள் கைகளில்' தொனிப்பொருளில் சிறுவர் தினம்

கொழும்பு, செப் 26

இம்முறை சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டம், 'எங்கள் நாடு, எங்கள் கைகளில்' எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

இந்த தொனிப்பொருளில், ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியன்று சர்வதேச சிறுவர் தினத்தை, பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, பாடசாலைகளிலும் கொண்டாடப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சீகே பெரேரா இது குறித்து அறித்தலை வெளியிட்டுள்ளார்.



ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி விடுமுறை தினமாகவிருப்பதால், பாடசாலைகளில் ஒக்ரோபர் 2ஆம், 5ஆம் திகதிகளில் இந்த நிகழ்வுகளை, சுகாதார நடைமுறை விதிகளுக் கமைவாக நடத்தவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் தின தொனிப்பொருள் அடங்கிய பதாதைகளைக் காட்சிப்படுத்தல், கொரோனா வைரஸ் பாதுகாப்புத் தொடர்பிலும் தொனிப்பொருளுக்கமைவாக மாணவர் மத்தியில் அவர்களது ஆக்கத்திறன், அழகியல்திறன்களை மேம்படுத்துமுகமாக குறுநாடகம், வாத்திய இசை, பாடல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், பாடசாலைச் சிறுவர்களை போதைப்பொருள் பாவனையிலிருந்து பாதுகாத்தல் தொடர்பிலும் ஆரோக்கியமான உணவுகளை உள்ளெடுத்தல் தொடர்பிலும் பெற்றோருக்கு விழிப்புணர்வூட்டவேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். (அ)

# இலங்கைக்கு யுனிசெவ் பாராட்டு

கொழும்பு, செப் 26

சிறார்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டத் திருத்தங்களுக்காக இலங்கைக்கு ஐ.நா. பாராட்டு தெரிவித்துள்ளது.

யுனிசெவ் எனப்படும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் இவ்வாறு இலங்கை அரசுக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

தொழில் புரிவதற்கான குறைந்தபட்ச வயதெல்லையை 16 ஆக அறிவித்ததனூடாக, கட்டாயக் கல்விக்கான வய தெல்லையும் 16 ஆக அமையும் என யுனிசெவ் நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதனூடாக கட்டாயக் கல்வி தொடர்பில் சிறார்களுக்கு காணப்படும் உரிமையை அர்த்தமுள்ளதாக்க முடியும் எனவும் யுனிசெவ் தெரிவித்துள்ளது.

சிறார்கள் மற்றும் இளையோர் தொடர்பான கட்டளைச் சட்டம் மற்றும் இளம் குற்றவாளிகள் தொடர்பான கட்டளைச் சட்டங்களைத் திருத்துவதனூடாகச் சிறுவர்கள் சிறைச்சாலைக்கு செல்வதைத் தவிர்க்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு திணைக்களத்தினூடாக சிறுவர்களுக்கு புனர்வாழ்வு வழங்க முடியும் எனும் தீர்மானத்தை உறுதிப்படுத்த முடியும் எனவும் யுனிசெவ் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)



# புதிய ஆயிரம் ரூபா!

கொழும்பு, செப் 26

மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டப்ளிவ்.டீ.லக்ஸ் மனினால் புதிய ஆயிரம் ரூபா நாணயத்தாள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிரதமரிடம் கையளிக்கப் பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டப்ளிவ். டீ.லக்ஷ்மன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின்போதே இந்த நாணயத்தாள் கையளிக்கப்பட்டது.

இதன்போது நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப் பட்டது. (அ)

சுவையான குளிர்பான,
சிற்றுண்டிகளுக்கு
லிங்கன்
கிறீம் ஹவுஸ்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

'ஆதிஷேஷன் மீது அனந்த சயனம் கொள்ளும்
மேதினி நாயகனே தேரேறி வருக"
வேலுப்பிள்ளை – நடராசா
மாயவன் Construction
138 A, யாழ்ப்பாணம்

'வண்ணை வளரும் வேங்கடேசா - அருள்
வெண்ணை திருடி உண்ட கண்ணனே தேரேறு"
NEWRAM CONSTRUCTION
NO,263 NAVALAR ROAD, JAFFNA.

HOTEL LOVUSIYAH (PVT) LTD.
NO 42, Colck Tower Road, Jaffna,
021 222 1326, 021 222 1327, 077 821 0122

ஸ்ரீராம ஜெயம்
YOUR ROYAL AUTO MOBILES
No.158 A, Hospital Road, jaffna
T.P.: 077 7290 300

"ஸ்ரீரங்க நாதனே! சரணம்"
ராகபி
போட்டோக் கொப்பி சென்ரர்
கடந்தகால வினாத்தாள்கள் மாதிரி வினாத்தாள்கள்
மற்றும் பாடசாலை உபகரணங்களை பெற்றுக்கொள்ளலாம்
153, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

ஹரே ராமா ஹரே ராமா ராமா ஹரே ஹரே
யாழ்காலணியகம்
YARL TRADES CENTER AGENTS FOR BATA
11, Modern Market, Hospital Road, Jaffna
T.P.: 021 222 3152


# யாழ்.வண்ணையம்பதி

# தேர்த்தி



## தேச நலன்

## தேவ தேவே வண்ணை



வைணவம் சார்ந்த வைகாசன ஆகம விதிமுறைகளுக்கு இணங்க யாழ்ப்பாண திருநகரிரே ஏறத்தாழ பதினான்காம் நூற்றாண்டில் அரகோச்சிய தமிழ்மன்னனாகிய குணபூசண ஆரியன் செகராச சேகரனின் காலத்து சிறய உருவில் வைணவ வழிபாட்டுத் தலமாக உருப்பெற்ற வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் வளர்ச்சிபெற்று சகல பரிவாரமூர்த்திகளின் சந்நிதிகள் அமையப் பெற்ற நிலையில் பிரசித்தமான நவக்கிரக பீடத்தை தன்னகத்தே உடைய ஒரு திவ்விய சேத்திரமாக விளங்கத் தொடங்கியது. இத்தகு சிறப்புக்களோடு விளங்கும் திருத்தலத்தில் நடைபெற்று வரும் மகோற்சவங்கள் தத்துவார்த்த சிறப்புக்களை உணர்த்துகின்றது.

நாராயணனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் வைணவம் தொன்மையான வரலாற்றுச் சிறப்புத் தத்துவங்களை தன்னுள் அடக்கி மிளிரும் வைணவ சமயத்தின் வளர்ச்சிக்குப் பெருதும் உறுதுணையாக இருந்தவர்கள் ஆழ்வார்களாவர். இவர்களால் அருளப்பட்ட அருட் பாசுரங்களிலே திருமாலின் பன்னிரு திருப் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

கேசவன், நாராயணன், மாதவன் கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திருவிக்கிரமன், வாமணன், சீதரன்,இருடிகேசன், பத்மநாதன், தாமோதரன் என்பனவாகம். இவற்றுள் நாராயணன் என்ற பெயரைக் கொண்ட எட்டெழுத்து மந்திரம் பெரிய திருமந்திரம் என்ற சிறப்பை உடையது. நாராயணன் என்பது "நாரம்" "அயனன்" என்ற இரண்டு சொற்களால் ஆனது.

### ஈழத்து திருப்பதி

யாழ்ப்பாணத்தில் வண்ணையம்பதியில் ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமான் என்ற திவ்விய திருநாமத்தோடு பன்னெடுங்காலமாக, புராதன சிறப்புக்கள் பலவற்றோடு கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றார். இந்த ஆலயமானது பல குறிச்சிகளை தன்னகத்தே

கொண்டு விளங்குகின்
கிழக்குத் திசையில் ஆ
கருடன் ஆலயமும் அ
ஆலயத்தின் தென்
சந்திரபுஸ்கரணி என்ற
ஆலயத்தின் வடக்குப்
கல்யாண மண்டபமும்
கோவிலுக்கு சிறப்புச்

பெருமாள் பவனி
ஸ்ரீராமாயணா, மகா
லீலைகளையும், அத
திருக்காட்சிகளைக் கா
ஆலய பிரதான வா
கொண்ட வளைவாக
காட்சியளிக்கின்றது.
மூவரும் பரிவார மூர்த்
யாழ்நகரிலே பிரசித்தி

# ி ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய

# ருவிழா சிறப்பிதழ் - 2020



## காத்து வாழ்விக்க
## னயம்பதியில் தேரேறி வருக!



ற்றது. ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில்
ஞ்சநேயர் சந்நிதியும் தேர்முட்டியும்,
மைந்து காட்சி தருகின்றன.
புறத்தே அழகிய பூந்தோட்டமும்
திருமஞ்சன தீர்த்தத் தடாகமும்
பகுதியில் ஸ்ரீலக்சுமி நாராயணன்
அமைந்து வேங்கடவனின் திருக்
சேர்க்கின்றன.

**திருத்தேர்**

வருகின்ற திருத்தேரில் கூட
பாரத இதிகாசங்களையும் ஸ்ரீ கிருஷ்ண
ன் வரலாறுகளையும் சித்தரிக்கின்ற
ணலாம்.
யிலில் அழகுடன் ஏழு வாயிலைக்
உயர்ந்த இராஜகோபுரம் கம்பீரமாக
தவியர் சகிதமாக இணைந்து
திகளும் நவக்கிரக பீடமும் அமைந்து
பெற்ற வைணவ ஆலயமாக வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் விளங்குகின்றது.

**ஸ்ரீரெங்க நாதர் திருக்காட்சி**

பெருமானின் ஆலயத்திலே ஸ்நபன மண்டபத்தில் மணிபூரகம் என்ற பகுதியில் ஸ்ரீரங்கநாதனின் இலப விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீதேவி பூமிதேவி சமேதராக ஸ்ரீ அரங்கநாத சுவாமி பிரமனை தாமரை மலரில் தாங்கிய வண்ணம் ஆதி ஷேனாகிய ஐந்து தலைகளுடைய அரவின் மீது சயனித்திருக்கின்ற திருக்காட்சி அற்புதமாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகு பெருமைகளையும் அற்புதமான வரலாற்றுச் சிறப்புகளையும் கொண்ட ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமானின் தேர் திருவிழா இன்று (26.09.2020) சனிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெறுகின்றது.

பத்து அவதாரங்களை எடுத்த பகவான் திருத்தேரில் ஆரோகணித்து வருகின்ற திருக்காட்சி அற்புதமாக அமைந்து விடுகின்றது. வேண்டுவார் வேண்டும் வரமனைத்தையும் தந்தருள காத்
தல் கடவுளாக அபயம் செய்து அரவணைத்து நல் வாழ்வு தர நாராயணன் திருத்தேரில் பவனிக்கு வருகின்றான்.

நினத்ததை நிறைவேற்றும் வண்ணனாக வண்ணையம்பதியில் தேரேறும் கண்ணன் தேர் வடம் பற்றுவோம். வாழ்வாங்கு வாழும் வரம் கேட்போம். எல்லா நலங்களையும் அருளும் எழில் வண்ணனின் அருள் நலம் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

**வர்ணனைக்கலாநிதி**
**மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.** MA

சிறிராம்
ஜுவல்லர்ஸ்
158, 193, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 8334,
077 773 0567


அலங்கார்
நகை மாளிகை
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2920

கொழும்பிலிருந்து
அனைத்து விதமான
பொருட்களையும் கிளி
நொச்சி, யாழ்ப்பாணம்
ஆகிய இடங்களுக்கு
அதிவேகமாக
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

T.K. TRANSPORT
NO.151 A, Navalar Road, Jaffna
T.P.: 077 949 7850/ 077282 1670
NO.37 Wolfendhal Street, Colombo-13
T.P.: 077 444 1670

## அமர காவியமான

# பாடும் வானம்பாடியின் வாழ்க்கைத் தடங்கள்...!



இந்தியாவின் ஆந்திர மாநிலம் நெல்லூரில் 1946 ஆம் வருடம் ஜூன் 4 அன்று பிறந்தார் எஸ்.பி. பாலசுப்ரமணியம்.

16 மொழிகளில் 40,000க்கும் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார். ஆனால்,அவர் ஆரம்பத்தில் திரைத் துறைக்குள் நுழைய வேண்டும், பின்னணிப் பாடகராக வேண்டும் என்று நினைத்ததில்லை.

ஓர் இசை நிகழ்ச்சியில் நடுவராகக் கலந்து கொண்ட பாடகி எஸ்.ஜானகி, அதில் போட்டியாளராகக் கலந்துகொண்ட பாலசுப்ரமணியத்தின் திறமையைப் பாராட்டி ஊக்கம் கொடுத்தார்.

1966 டிசம்பர் 15 அன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மரியாதை ராமண்ணா என்கிற தெலுங்குப் படத்தில் பாடினார். இதுவே அவரின் முதல் திரைத்துறைப் பாடல்.

‘ஹோட்டல் ரம்பா’ என்கிற தமிழ் படமே எஸ்.பி.பி. முதன்முதலில் பாடிய படம். ஆனால், அது வெளிவரவில்லை. பின்னர், சாந்தி நிலையம், அடிமைப் பெண் படங்களில் பாடினார். அடிமைப் பெண் படமும் அவர் பாடிய “ஆயிரம் நிலவே வா...” பாடலும் ஹிட் ஆனதால் தமிழில் பெரிய திருப்புமுனை ஏற்பட்டது.

1969 இல் எம்.ஜி.ஆருக்காக அடிமைப் பெண் படத்தில் ஆயிரம் நிலவே வா என்கிற பாடலைப் பாடி மிகப்பெரிய திருப்புமுனையைப் பெற்றார்.

1970 இல் இளையராஜாவைச் சந்தித்தார் எஸ்.பி.பி. இளையராஜாவின் மூவர் சகோதரர்களும் எஸ்.பி.பி.யும் சேர்ந்து ஒரு இசைக்குழுவை ஆரம்பித்தார்கள்.

கன்னட இசையமைப்பாளர் உபேந்திர குமாருக்காக 1981 பெப்ரவரி 8 அன்று ஒலிப்பதிவுக்கூடத்தில் ஒரே நாளில் 21 பாடல்களைப் பாடி சாதனை நிகழ்த்தினார்.

1980களில் இளையராஜா - எஸ்.பி.பி. கூட்டணி தமிழ்த் திரையுலகில் கொடிகட்டிப் பறந்தது. காலத்தால் அழியாத பாடல்களை இருவரும் அளித்தார்கள்.

தமிழ் திரையிசையில் இளையராஜா, எஸ் பி பி, எஸ். ஜானகி கூட்டணியில் வெற்றிப் பாடல்கள் நிறைய உள்ளன.

இன்றைக்கும் எஸ்.பி.பி.யின் முக்கிய அடையாளங்களாக அந்தப் பாடல்கள் உள்ளன.

ஆறு தேசிய விருதுகள் பெற்றுள்ள எஸ்.பி.பி., ‘சங்கராபரணம்’ என்கிற தெலுங்குப் படத்துக்காக முதல்முறையாகத் தேசிய விருதைப் பெற்றார்.

1981 இல் ஏக் துஜே கே லியே படத்தின் மூலம் ஹிந்தித் திரையுலகில் நுழைந்த எஸ்.பி.பி., இதற்காக அவரின் இரண்டாவது தேசிய விருதைப் பெற்றார்.பிறகு இரு தேசிய விருதுகளைத் தெலுங்குப் படப் பாடல்களுக் காகவும் தலா ஒரு தேசிய விருதை தமிழ், கன்னடப் படப் பாடல்களுக்காகவும் பெற்றார்.

2001 இல் பத்மஸ்ரீ, 2011 இல் பத்மபூஷண் விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டன.

தமிழில் எம்.ஜி.ஆருக்காக முதலில் பாடிய எஸ்.பி.பி., சமீபத்தில் ரஜினிக்காக அண்ணாத்த படத்துக்காகப் பாடியுள்ளார்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்றிருந்த காலத்திலும், சில எழுச்சிப் பாடல்களை அவர் பாடியுள்ளார்.

எஸ்.பி.பி. பாடிய பாடல்கள் சாகாவரம் பெற்றவை. தமிழர்களின் வாழ்வில் என்றைக்கும் அவற்றுக்கு இடமுண்டு.

எஸ்.பி.பி நடிகர் கமல்ஹாசனுக்கு 120 தெலுங்கு திரைப்படங்களில் பின்னணிக்குரல் கொடுத்துள்ளார்.

கமல்ஹாசன் தவிர, ரஜினிகாந்த், சல்மான் கான், கே. பாக்யராஜ், மோகன், அணில்கபூர், கிரிஸ் கர்ணாட், ஜெமினி கணேசன், அர்ஜூன் சர்சா, நாகேஷ், கார்த்திக் மற்றும் ரகுவரன் ஆகியோருக்கு பல்வேறு மொழிப் படங்களில் பின்னணிக்குரல் கொடுத்துள்ளார்.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தென்னிந்திய மொழிகளில் எழுபதுக்கும் அதிகமான திரைப்படங்களில் நடித்துள்ளார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி இந்நான்கு மொழிகளில் நாற்பத்தைந்து திரைப்படத்திற்கு மேல் இவர் இசையமைத்துள்ளார்.



குடும்பத்தினருடன் எஸ்.பி.பி.



எஸ்.பி.பி., வாணி ஜெயராம், ஏ.ஜே.ஜேசுதாஸ் ஆகியோருக்கான விருது விழா



எஸ்.ஜானகி, இளைஞராஜா, எஸ்.பி.பி.



இளையராஜாவுடன்...



பாடகி சுசீலாவுடன் ...

# இந்திய-இலங்கை உறவுகளை மறு ஆய்வு செய்யவேண்டும்!

## மஹிந்தவின் பதிவுக்கு மோடி பதில்

கொழும்பு, செப்.26

**இலங்கை-இந்தியாவுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகளை மறு ஆய்வு செய்ய எதிர்பார்ப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

**பிரதமர் நரேந்திர மோடி, தனது ருவிட்டர் பக்கத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இவ்வாறு பதிவேற்றியுள்ளார்.**




கடந்த புதன்கிழமை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில், "செப்ரெம்பர் 26ஆம் திகதி, திட்டமிடப்பட்ட மெய்நிகர் உச்சி மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடியுடன் உரையாட எதிர்பார்க்கிறேன்.

அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு, சுற்றுலா மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள பிற பகுதிகளிலிருந்து எமது நாடுகளுக்கு இடையிலான பன்முக இரு தரப்பு உறவை மறுபரிசீலனை செய்ய எதிர்பார்க்கிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், அந்த ருவிட்டர் பதிவுக்குப் பதிலளித்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, "இருதரப்பு உறவுகளை விரிவாக மறுஆய்வு செய்ய எதிர்பார்க்கின்றேன்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு பிந்திய காலத்தில், இரு நாடுகளும் தங்கள் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழியை ஆராய வேண்டும்" என ருவிட்டரில் பதிவேற்றியுள்ளார்.

இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள இந்தியாவின் முதல் மெய்நிகர் உச்சிமாநாட்டில் இருநாட்டு தலைவர்களும் இவ்விடயம் தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இதேவேளை இலங்கை - இந்திய மீனவர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் உரையாடப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றியோ அல்லது இலங்கையில் முன்னெடுக்கப்படும் அரசமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கை சம்பந்தமாகவோ இதன்போது கலந்துரையாடப் படாது என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக மருந்தியலாளர் நாள் யாழில் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், செப்.25

வடஇலங்கை மருந்தியலாளர் சங்கத்தினால் உலக மருந்தியலாளர் நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் இந்நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பாரம்பரிய உணவு மற்றும் மருந்து ஆய்வாளர் எஸ். தயாபரன் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில், மருந்தியலாளர்கள் பேண வேண்டிய விடயங்களையும் அவர் முன்வைத்திருந்தார். (எ)

# பொறுப்பை புறக்கணித்த முன்னாள் ஜனாதிபதி

## மைத்திரிமீது குவியும் குற்றச்சாட்டு



கொழும்பு, செப்.26

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலை தடுக்கும் பொறுப்பு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரி, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு முன்னர் வெளிநாடு சென்றமை ஊடாக, அவர் தனது பொறுப்பை புறக்கணித்துள்ளதாக முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுவரும், ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் ஆஜரான பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் என்பது பதவி ஒன்று மாத்திரமே. எனக்கு வழங்கப்பட்டிருந்த நிறுவனங்கள், வர்த்தமானியில் தனியான அமைச்சாகத் தான் பணிகளைச் செய்தேன்.

எனது அமைச்சின் கீழ் ரணவிரு சேவா அதிகார சபை, பாதுகாப்பு பாடசாலை, பாதுகாப்புப் பணியாளர்கள் கல்லூரி ஆகியவைதான் காணப்பட்டன.

பொலிஸ், புலனாய்வுப் பிரிவு, முப்படை அனைத்தும் எனது அமைச்சின் கீழ் இல்லை. அப்படியிருக்கையில் நாட்டின் பாதுகாப்பு எனது கையில் எனக் கூற முடியாது.

இந்த விடயதானங்கள் அனைத்தும் பாதுகாப்பு அமைச்சருக்கு கீழ்தான் இருந்தன.

தேசிய பாதுகாப்பு அப்போதைய ஜனாதிபதியின் கையில் தான் இருந்தது. அவர் அந்த சமயத்தில் வெளிநாட்டு சென்றமையினால் அவரின் கடமைகளைச் சரிவர செய்யவில்லை என நான் நினைகின்றேன் - என்றார். (எ)

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில்

# மூன்று மேற்குலக நாடுகளுக்கு வாக்களிக்க இலங்கை மறுப்பு

கொழும்பு, செப் 26

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெறுவதற்காக முன்னிலையான மூன்று மேற்குலக நாடுகளுக்கு வாக்களிப்பதற்கு இலங்கை மறுப்பு தெரிவித்துவிட்டதாக ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு: -

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்கமுடியாது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவும், நானும் சபைக்கு தெளிவாக அறிவித்துவிட்டோம். அதுமட்டுமல்ல, எம்மால் செய்யக்கூடிய விடயங்களை மட்டுமே ஏற்போம் என்பதையும் கூறிவிட்டோம்.

இந்நிலையில் ஐ.நா. பொதுச் சபைக்கூட்டத் தொடரில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எமது நாட்டின் மேற்படி கொள்கையை, நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துரைத்தார். தேவையற்ற தலையீடுகளுக்கு அடிபணிய மாட்டோம் என திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

இது சிறப்பானதொரு அறிவிப்பாகும். நாடு தொடர்பில் சிந்தித்து முடிவெடுப்பதற்குரிய தைரியம் அவருக்கு இருக்கின்றது.

அதேவேளை, ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு அங்கத்துவ நாடுகளை தெரிவு செய்வதற்காக அண்மையில் வாக்கெடுப்பு நடைபெற்றது. அங்கத்துவத்தைப் பெறுவதற்கு மூன்று மேற்குலக நாடுகளும் முன்னிலையாகின. இந்த மூன்று நாடுகளுக்கும் எமது வாக்கை பயன்படுத்த முடியாது என்பதை எமது பிரதிநிதி தெளிவாக அறிவித்துவிட்டார். இதற்கான ஆலோசனையை ஜனாதிபதி வழங்கியிருந்தார். மேற்படி மூன்று நாடுகளும் இலங்கை தொடர்பில் கடுமையாக செயற்பட்டுள்ளன-என்றார். (அ)

# மோ.சைக்கிள் விபத்தில் இருவர் சாவு


கொழும்பு, செப். 26

கிரிதலை- பகமுண பிரதான வீதியின் கொட்டபிடிய பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியில் இருந்து வழுக்கிச் சென்று கொங்கிரீட் தூண் ஒன்றில் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில், பின்னால் அமர்ந்து சென்ற நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர்களில் ஒருவர் புலஸ்திபுர வைத்தியசாலையில் சுவசெரிய அம்புலன்ஸ் சாரதி என தெரியவந்துள்ளது.

# சிறுத்தை இறைச்சி விற்ற மூவர் கைது



கொழும்பு, செப் 26

சிறுத்தைப் புலியொன்றை கொலை செய்து இறைச்சிற்காக விற்பனை செய்துகொண்டிருந்த மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி, உடுதும்பர பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

உடுதும்பர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் ஒருவரின் வீடு சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது சிறுத்தையின் இறைச்சி மற்றும் உடற்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தெல்தெனிய நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

செய்திகள்



# உழவியந்திரத்துடன் மோதி மோட்டார் சைக்கிள் விபத்து

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் இருபாலை தேவாலயத்திற்கு அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து இருபாலை நோக்கிப் பயணித்த உழவியந்திரமும், மோட்டார் சைக்கிளும் நேற்றுக்காலை மோதி விபத்துக்குள்ளாகின.

பிரதான வீதியில் பயணித்த உழவியந்திரம், சிறு வீதிக்குத் திரும்ப முற்படுகையில், உழவியந்திரத்திற்குப் பின்னால் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டையிழந்து, உழவியந்திரத்தின் பெரிய ரயருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது. இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# பாகிஸ்தான் பாதுகாப்பு ஆலோசகர் கடற்படைத் தளபதியுடன் சந்திப்பு

கொழும்பு,செப்.26

இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில், புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் கேணல முஹம்மது சப்தார் கான், நேற்றுமுன்தினம், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகே தென்னவை, கடற்படைத் தலைமையகத்தில் சந்தித்தார்.

புதிதாக, நியமிக்கப்பட்ட பாகிஸ்தான் பாதுகாப்பு ஆலோசகரை வாழ்த்திய கடற்படைத் தளபதி, இந்த உத்தியோகபூர்வ சந்திப்பில் இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால உறவு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான பரஸ்பர நலன்களைப் பற்றிக் கூறினார்.

இந்நிகழ்வைக் குறிக்கும் வகையில் கடற்படைத் தளபதியும் பாகிஸ்தான் தூதரகத்தில் புதிய பாதுகாப்பு ஆலோசகருக்கும் இடையே நினைவுச் சின்னங்கள் பரிமாறப்பட்டன. (எ)

# ஆன்மீகப் பண்புகள் நிறைந்த தலைமுறை மிகவும் அவசியம்

## ஜனாதிபதி கோட்டா வலியுறுத்து



கொழும்பு,செப்.26

**சமயத்தின் மீதும், அறநெறிகள் மீதும், பற்றுக்கொண்ட ஆன்மீகப் பண்புகள் நிறைந்த, தலைமுறையொன்றை நாட்டின் பௌதீக அபிவிருத்தியுடன் இணைந்ததாக, எதிர்காலத்திற்கு வழங்கவேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கை நன்நெறிகளால் வளம்பெற்ற ஒரு நாடாக, விளங்குவதற்கு பௌத்த சமயமும், ஏனைய சமயங்களும் போதிக்கும் சமய சகவாழ்வே காரணமாகும் எனவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

அறநெறிப் பாடசாலைகள் மற்றும் பிரிவெனா கல்வியின் மேம்பாட்டின் ஊடாக, ஒழுக்கப்பண்பாடான ஒரு பயணத்திற்கு பலமான அடித்தளத்தை இட முடியுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அறநெறிப் பாடசாலைகள், பிக்குமார் கல்வி, பிரிவெனாக்கள் மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்கள் இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள்தொடர்பாக, நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நீண்டகாலமாக அமைதியாகவும், நல்லிணக்கமாகவும், வாழ்ந்து வரும் இலங்கை சமூகத்தினுள் தீவிரவாதமற்ற உண்மையான சமயக் கல்வியை மேம்படுத்துவதற்கு அனைத்துச் சமயங்களினதும், பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் குறைபாடுகளை முழுமைப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் இராஜாங்க அமைச்சின் முழுமையான தலையீடு இருக்கவேண்டுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் தேவைகளையும், அவர்களை வலுவூட்டுவதற்காக, மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களையும், கண்டறிந்து அவற்றைச் செயற்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

பல்கலைக்கழக நுழைவு மற்றும் தொழில் வாய்ப்புக்களின்போது தர்மாச்சாரிய சான்றிதழுக்கு ஒரு பெறுமானத்தை வழங்கக்கூடிய வாய்ப்புக்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

பிரிவெனா மற்றும் அறநெறிப் பாடசாலைகளின் பாடநூல்களை மீளத்தொகுக்க வேண்டியதன் அவசியம் மற்றும் பிரிவெனா ஆசிரியர்களாக உள்ளவர்கள் இம்முறை பட்டதாரி தொழில் வாய்ப்புக்களைப் பெற்றிருந்தால், அவர்கள் சேவை செய்த பிரிவெனாக்களிலேயே நியமனங்களை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பிக்குமார்களின் ஆங்கில மொழி அறிவு, கணனி மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கு பிரிவெனா ஆசிரியர்கள் நியமனம், சம்பளம் மற்றும் கொடுப்பனவு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

பிரிவெனாக்களுக்கு அபிவிருத்தி அதிகாரி ஒருவர் மற்றும் சிற்றூழியர்களை, பட்டதாரி தொழில்வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புக்கள் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் கீழ் வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பிரிவெனா மற்றும் பிக்குமார் கல்வித்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தி மகா சங்கத்தினர் மற்றும் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இராஜாங்க அமைச்சர் விஜித்த பேருகொட, புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர ஆகியோருடன் அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், மற்றும் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (எ)

# ஜனாதிபதிக்கு மரண அச்சுறுத்தல் ‘பொடி லெசி”க்கு மறியல் நீடிப்பு

கொழும்பு,செப்.26

பாதாள உலகக் குழு உறுப்பினர் ‘பொடி லெசி” என்ற ஜனித் மதுசங்க, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி வரையில் மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

காலி நீதவான் நீதிமன்றில் நேற்று அவர் முற்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு, மரண அச்சுறுத்தல் விடுத்ததாக அவருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# 3,333 பேருக்கு கொரோனா

கொழும்பு,செப்.26

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 3,333 ஆக அதிகரித்துள்ளது.

அந்தவகையில், குவைத்திலிருந்து நாடு திரும்பிய 3பேர், கட்டார் மற்றும் ஈரானில் இருந்து நாடு திரும்பிய இருவருக்கும், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்தும், மாலைதீவில் இருந்தும் வருகை தந்த இருவருக்கும், கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, வெளிநாட்டவர் 11 பேர் உட்பட 178 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், 45 பேர் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா? எனச் சந்தேகத்தின் பேரில் வைத்திய கண்காணிப்பில் இருக்கின்றனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து பூரணமாகக் குணமானோரின் எண்ணிக்கை 3,142 ஆக உயர்ந்துள்ளது. (எ)



யாழ்.பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர் தலைவர்கள், வகுப்பு முதல்வர்களுக்கான சின்னம்சூட்டும், நிகழ்வு அதிபர் திருமதி அபிராமி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், விருந்தினராகப் பங்கேற்ற முன்னாள் அதிபர் ஸ்ரீபன் றெக்ஸ் மாணவர்களுக்கு சின்னம் சூட்டுவதையும் மாணவர் தலைவர்களையும், படங்களில் காணலாம். (எ)

செய்திகள்

# நினைவேந்தல் எங்கள் உரிமை!

## வலி. கிழக்கில் தீர்மானம் நிறைவேறியது ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.26

**"உயிர்நீர்த்தவர்களை நினைவுகூருவதற்கு உள்ள அடிப்படை உரிமையை அரசாங்கம் மறுக்கக்கூடாது" என்று வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அந்தத் தீர்மானம் ஜனாதிபதிக்கு கிடைக்கத் தக்கவாறு ஜனாதிபதி செயலகத்திற்கு தொலைநகல் (பக்ஸ்) மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது.

இந்த அமர்வில் தவிசாளர் தியாகராஜா நிரோஷினால் உயிர்நீத்தவர்களை நினைவு கூருவதற்கான விசேட பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது. இது ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இவ்விடயத்தில் பிரேரணையை சமர்ப்பித்து தவிசாளர் கருத்துரைக்கையில், "போரில் நேரடியாகத் தொடர்புபட்டும் தொடர்பு படாமலும் உயிர் நீத்தவர்களை அஞ்சலிப்பதற்கு எமது மக்களுக்கு உரிமை உண்டு. நினைவு கூருதல் என்பது அடிப்படை உரிமை களில் ஒன்றாகும். சர்வதேச சமவாயங்கள் ரீதியிலும் உயிர்நீத்தவர்களை நினைவு கூருவதற்கான சகல உரிமையும் எமக்குண்டு.

இந் நிலையில், தற்போது நினைவுகூரல்களுக்குப் பல வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. எனவே, அரசாங்கம் நாட்டில் நினைவு கூருதலுக்கான உரிமையைக் கேள்விக்கு உட்படுத்துவதையும் நிறுத்த வேண்டும் என மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி அலகு என்ற வகையில் நாம் கோருகின்றோம்", - என்றார். (ஐ)



# பிரிட்டன் தூதுவரை சந்தித்தார் சுமந்திரன்

கொழும்பு, செப் 26

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹட்டனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் கொழும்பில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் இது குறித்து தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் பல முக்கிய விடயங்கள் குறித்து பேசப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# "தமிழில் வந்தது அழைப்பாணை நீதிமன்றம் செல்ல மாட்டேன்"

## அம்பிட்டிய சுமண தேரர் எகத்தாளம்

மட்டக்களப்பு, செப். 26

"நீதிமன்ற அழைப்பாணை தமிழில் அனுப்பப்பட்டமையால் நான் நீதிமன்றுக்கு செல்லப் போவதில்லை."

இவ்வாறு குறிப்பிட்டு, காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார் சர்ச்சைக்குரிய மட் டக்களப்பு அம்பிட்டிய சுமண ரத்ன தேரர்.

மட்டக்களப்பில் தொல்லியல் திணைக்கள அதிகாரியை தடுத்து வைத்திருந்த சம்பவம் தொடர்பில், மட்டக்களப்பு நீதிமன்றம் அனுப்பிய அழைப் பாணை குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் கூறுகையில்: -

"அழைப்பாணை கடிதம் மூன்று தாள்களில் கிடைத்துள்ளது, அது தமிழ் மொழியில் உள்ளதால் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை, அதனால் என்னால் நீதிமன்றம் செல்ல முடியாது என்று கூறி பொலிஸாரிடமே கொடுத்து விட்டேன். அழைப்பாணையை சிங்கள மொழியில் அனுப்பி னால் மட்டுமே என்னால் நீதிமன்றம் செல்ல முடியும்" என்றார். (ஐ)

# 20 ஆவது திருத்த எதிர் மனுக்கள் உயர்நீதிமன்றம் செப். 29இல் அழைப்பு

கொழும்பு, செப்.26

அரசமைப்பின் 20ஆவது சட்டவரைவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு மனுக்கள் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உயர்நீதிமன்றில் அழைக்கப்படுகின்றன.

இந்த மனுக்களைக் கேட்பதற்காக 5 நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய, நீதியரசர்கள் புவனேக அலுவிகார, சிசிர டி ஆப்ரூ, பிரியந்த ஜயவர்த்தன, விஜித் மலல்கொட ஆகிய ஐவர் கொண்ட அமர்வே நியமிக்கப்பட்டுள்ளது.

20ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டவரைவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட 12 தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் சிறப்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவில் அடிப்படை முரண்பாடுகள் இருப்பதால் அதனை நிறைவேற்ற பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மாத்திரம் போதாது. அதனால் அது பொது வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டும் என்று மனுக்களில் கோரப்பட்டுள்ளன. (அ)

# காணிப் பிணக்குகளை தீர்க்க தனி நீதிமன்றம் அமைக்கலாம்

## அமைச்சர் சந்திரசேன யோசனை

கொழும்பு, செப். 26

மக்கள் மத்தியில் நெடுங்காலமாக நிலவும் காணிப் பிணக்குகளுக்குத் தீர்வு காண மாவட்ட அடிப்படையில் காணி விவகார நீதிமன்றத்தை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான யோசனையை அமைச்சரவையில், சமர்ப்பிப்பேன் என்று காணி விவகார அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: -

"பொது மக்கள் மத்தியில் காணப்படும் பெரும்பாலான பிணக்குகளுக்குக் காணி, பிரதான காரணியாக உள்ளது. காணி விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கும் பிணக்குகள் இறுதியில் கொலை மற்றும் பாரதூரமான குற்றச் செயல்களுக்கு கொண்டு செல்லும்.

'காணி தொடர்பான பிணக்குகளுக்கான வழக்கு விசாரணைகள் 25 தொடக்கம் 30 வருட காலம் வரை நீண்டு செல்லும். ஒரு கட்டத்தில் வழக்கு தாக்கல் செய்தவர் நியாயம் கிடைக்காமலே உயிரிழந்து விடுவார். ஆகவே, காணி பிரச்னைகள் தொடர்பான விசாரணைகளை 3 மாத காலத்துக்குள் நடத்தி பிரச்னைகளுக்கு தீர்வு காண மாவட்ட மட்டத்தில் காணி விவகாரம் தொடர்பான நீதிமன்றத்தை நிறுவ காணி விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானம் தொடர்பான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்", - என்றார்.



# புதிய தூதுவர்கள் நியமனம்! தெரிவுக்குழு அனுமதித்தது

கொழும்பு, செப். 26

புதிய இராஜதந்திரிகளாக பரிந்துரைக்கப்பட்டிருந்த 8 பேரையும் தூதுவர் பதவிகளில் நியமிக்க பாராளுமன்ற உயர் பதவிகள் தொடர்பிலான தெரிவுக்குழு நேற்று அனுமதி வழங்கியது.

இதற்கமைய, இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராக மிலிந்த மொறகொட, சீனாவுக்கான தூதுவராக பாலித கொஹன்ன, அமெரிக்காவுக்கான தூதுவராக ரவிநாத ஆரியசிங்க, ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக சீ.ஏ. சந்திரபிரேம ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

இதுபோல், பிரான்ஸிற்கான தூதுவராக பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம, தென்னாபிரிக்காவுக்கான உயர்ஸ்தானிகராக எஸ். அமரசேகர, ஆப்கானிஸ்தானுக்கான தூதுவராகவும் ஓய்வு பெற்ற அட்மிரல் கே.கே.வி.பி. ஹரிஸ்சந்திர சில்வாவும் நியமிக்கப்படவுள்ளனர். (ஐ)

# '20' திருத்தத்துக்கு எதிராக 6 மனுக்கள்

கொழும்பு, செப். 26

பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இருபதாவது திருத்த வரைபை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன் றில் மேலும் ஆறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதன் மூலம் இருபதாவது திருத்தத்திற்கு எதிராக நேற்று வரை 18 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுத்தாக்கல்கள் மீதான பரிசீலனை எதிர்வரும் 29 ஆம் திகதி உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் எடுக்கப்படும். (ஐ)

# சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், செப் 26

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் களைத் திருடினர் எனச் சந்தேக நபர் கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த மூவராலும் திருடப்பட்ட 25க்கும் மேற்பட்ட சைக்கிள்களும் கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவினரின் விசேட அதிரடி நடவடிக்கையின் போது திருடப்பட்ட சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சைக்கிள்களைப் பறிகொடுத்தவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்து அவற்றை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 275,590

## பி.சி.ஆர். சோதனை!

கொழும்பு, செப்.26

இலங்கையில் இதுவரை நடத்தப்பட்ட பி.சி.ஆர்.சோதனைகளின் எண்ணிக்கை, இரண்டு இலட்சத்து 75 ஆயிரத்து 590 என கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும் தேசியமையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாத்திரம் 1612 பி.சி.ஆர்.சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

ஈழநாடு
Eelanadu

# டில்லி அதிரடி ஆட்டம்: அடங்கியது சென்னை



டுபாய், செப். 26

எப்போதும் போராட்ட குணத்தை வெளிப்படுத்தும் சென்னை அணி டில்லி கப்பிட்டல்ஸுடனான நேற்றைய ஆட்டத்தில் போராடாமலே தோல்வியைத் தழுவியது.

ஐ.பி.எல். ரி - 20 தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கிறது. இதில் நேற்று நடந்த ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், டில்லி கப்பிட்டல்ஸும் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

பிரித்திவி ஷா, தவான் இணை தொடக்கம் கொடுத்தது. இருவரும் மிகச் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர். ஷா அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தார். அவருக்குத் துணையாக நின்று பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் தவான். இருவரும் 94 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த நிலையில் ஷிகர் தவான் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரிஷப் பந்த் களமிறங்கிய சிறிது நேரத்திலேயே 43 பந்துகளில் ஒரு சிக்ஸர், 9 பௌண்டரிகளுடன் 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் டோனியால் ஸ்ரொம்ப் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

ரிஷப் பந்துடன் இணைந்த ஐயர் நிலைத்து ஆட முற்பட்டார். ஆனால், 26 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரிப் அவுட் ஆகி வெளியேறினார்.

20 ஓவர்களில் 3 விக்கெட்களை 175 ஓட்டங்களைப் பெற்றது. ரிஷப் பந்த் 37 ஓட்டங்களுடனும், ஸ்ரொய்னிஸ் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சென்னையின் பந்து வீச்சில் சாவ்லா 2 விக்கெட்களையும் குர்ரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

176 என்ற இலக்கை சென்னை இலகுவாகத் தொட்டுவிடும் என்று ரசிகர்கள் எண்ணினர். ஆனால், தொடக்கம் கொடுத்த முரளி விஜய் 10, ஷேன் வற்சன் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். டூ பிளசிஸ் நிலைத்தாட, பின்னர் வந்த கய்க்வட் 5 ஜாதவ் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

நிதானமாக ஆடிய டூ பிளசிஸ் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அதிரடி காட்டுவார் என்று



எதிர்பார்க்கப்பட்ட டோனியும் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று 44 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

டில்லியின் பந்து வீச்சில் ரபாடா 3, நோர்ற்ஜே 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பிரித்திவி ஷா தெரிவானார். (ஐ)

DREAM11 IPL

இன்றைய ஆட்டம்

கொல்கத்தா எதிர் ஹைதராபாத்

மைதானம் : அபுதாபி

நேரம் : இரவு 7.30 (இலங்கை)

## டான் தொலைக்காட்சியின் உதைபந்தாட்டம்

# தீவக வெற்றிக்கிண்ணம்: வேலணை ஐயனார் வசம்




டான் தொலைக்காட்சி நடத்திய உதைபந்தாட்டத் தொடரின், விறுவிறுப்பான இறுதியாட்டத்தில் புங்குடுதீவு சென்.சேவியர் அணியை பெனால்டியில் வெற்றிபெற்று சம்பியனைக் கைப்பற்றியது வேலணை ஐயனார் அணி.

டான் தொலைக்காட்சி குழுமம் நடத்தி வந்த தீவக வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் அல்லைப்பிட்டி பிலிப்ஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொடர், கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக நிறுத்தப்பட்டது. நாடு வழமைக்குத் திரும்பியதைத் தொடர்ந்து சுகாதார விதிமுறைகளைக் கடைப்படுத்தி மட்டுப்படுத்தப்பட்ட ரசிகர்களுடன் போட்டிகள் இடம்பெற்று, இறுதியாட்டத்திற்கு அணிகள் தெரிவாகின.

இறுதியாட்டத்தில் வேலணை ஐயனார் அணியும், புங்குடுதீவு சென். சேவியர் அணியும் மோதின. ஆரம்பம் முதலே விறுவிறுப்புக் குறையாத ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தன.

இரண்டாவது பாதியிலும் இரு அணிகளும் சமபலத்துடனே பொருதின. இதனால் ஆட்டம் முடிவில் 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தன. இதனால், வெற்றி தோல்வியைக் கணிப்பதற்காக பெனால்டி உதை வழங்கப்பட்டது.

இதில் 3:2 என்ற கோல் கணக்கில் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியனை சுவீகரித்தது. அந்த அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது.

இறுதியாட்டத்தின் நாயகனாக ஐயனர் விளையாட்டுக் கழகத்தின் செ. அகீபன், சிறந்த கோல் காப்பாளராக புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக் கழகத்தின் ரி.விதுஜன் தெரிவாகினர்.

மேலும், உதவி தேவைப்படும் குடும்பங்களின் 3 மாணவர்களுக்கு சைக்கிள்கள் இந்நிகழ்வில் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு டான் தொலைக்காட்சிக் குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.எஸ். குகநாதன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு விருந்தினராக தீவக மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்தந்தை டேவிட் மரியமனுவேற்பிள்ளை அடிகளாரும் கலந்து கொண்டனர். (ஐ)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : பீட் பொக்ஸ்
11.00 மணி : மைதானம்

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை?

**இரவு**
7.00 மணி : சுப்பர் குறுாப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்
10.00 மணி : யாவரும் கேளீர்




**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி

**இரவு**
6.00 மணி : கொமடி கலாட்டா
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN TELEVISION VISTA HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : டொப் 20
11.00 மணி : ரிவைன்ட் ராகங்கள்

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : எங்கேயும் எப்போதும்
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : அண்பிளக் சோ
10.00 மணி : பாடும் நிலா

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - தமிழ்
8.15 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) மறு ஒளிபரப்பு
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்

**இரவு**
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : உயர்தரம் கணிதம் விஞ்ஞானப்பிரிவு

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்



**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

**Pirai Television**

**காலை**
6.00 மணி : தர்ஜீமத்துல் குர்ஆன்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இறை தென்றல்
8.00 மணி : குத்துபா பிரசங்கம்
8.30 மணி : அல் உழ்கிய்யா
9.30 மணி : ஹஜ் ஆவணப்படம்
10.00 மணி : சிறப்பு நேரலை வாழ்த்து நிகழ்ச்சி

**பகல்**
12.00 மணி : பிறை பிரசங்கம்
1.00 மணி : சிறப்பு திரைப்படம்
3.00 மணி : இசை மழை
4.00 மணி : குட்டீஸ் ஈத் கொண்டாட்டம்
5.00 மணி : கவிதாரங்கம்
6.00 மணி : பத்தாம் பிறை கலந்துரையாடல்

**இரவு**
7.00 மணி : யார் இவர்?
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.09.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.